No. of Printed Pages : 7

**6760**

பதிவு எண்
Register Number

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

# Part III — Vocational Subjects

(Agricultural Area)

# வேளாண் செயல்முறைகள்
# AGRICULTURAL PRACTICES

( தமிழ் வழி / Tamil Versions )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

குறிப்பு : **அனைத்து வினாக்களுக்கும்** விடையளிக்கவும்.

**I.** **(A)** கொடுக்கப்பட்ட **நான்கு** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. **15x1=15**

**1.** ஒரு எக்டர் நெல் பயிரிட தேவையான நாற்றங்கால் அளவு :

(அ) 10 சென்ட் (ஆ) 40 சென்ட்

(இ) 60 சென்ட் (ஈ) 20 சென்ட்

**2.** மக்காச்சோள தண்டு துளைப்பானை கட்டுப்படுத்துவதற்கான விதை நேர்த்தி இரசாயனம் :

(அ) காப்டான் (ஆ) திராம்

(இ) இமிடா குளோபிரிட் (ஈ) பெவிஸ்டின்

[ திருப்புக / Turn over

3. பயறுவகைப் பயிர்களில் தழைச்சத்து தேவையினை குறைக்க பயன்படுத்தப்படும் உயிர் உரம் :

(அ) அசோஸ்பைரில்லம் (ஆ) பாஸ்போ பேக்டீரியம்

(இ) ரைசோபியம் (ஈ) அசோலா

4. தென்னை சாகுபடியில் நாற்றங்காலில் நெற்றுகளை நடுவதற்கான இடைவெளி :

(அ) $1$மீ $\times$ $1$மீ (ஆ) $7.5 \times 7.5$மீ

(இ) $30 \times 30$ செ.மீ (ஈ) $75 \times 75$செ.மீ

5. பருத்தி விதைகளின் மேலுள்ள பஞ்சை நீக்க ___________ என்ற இரசாயனம் பயன்படுத்தப்படுகிறது.

(அ) கந்தக அமிலம்

(ஆ) நைட்ரிக் அமிலம்

(இ) ஹைட்ரோ குளோரிக் அமிலம்

(ஈ) பென்சாயிக் அமிலம்

6. பூசனி வகைப் பயிர்களின் குடும்பம் ___________.

(அ) மால்வேசியே (ஆ) குக்கர்பிட்டேசியே

(இ) கிராமினேசியே (ஈ) லெகூமினேசியே

7. பாக்கு மரச் சாகுபடிக்கு ஏற்ற மண் வகை ___________.

(அ) செம்மண்

(ஆ) கரிசல் மண்

(இ) மணற்பாங்கான மலை மண்

(ஈ) வண்டல் மண்

8. சடுதி மாற்றத்திற்காக பயன்படும் மூலிகைப்பயிர் ___________ .

(அ) துளசி (ஆ) கண்வலிக் கிழங்கு

(இ) கீழாநெல்லி (ஈ) வேம்பு

9. ரோஜாவில் கவாத்து செய்யப்பட்ட பகுதிகளில் __________ பூசணக்கொல்லி பசை தடவ வேண்டும்.

(அ) போர்டோ பசை (ஆ) திராம்
(இ) கேப்டான் (ஈ) கந்தகம்

10. ஒருங்கிணைந்த பண்ணை நிர்வாகத்தில் __________ வளர்ப்புக்கு தனியாக இடம் தேவையில்லை.

(அ) கோழி (ஆ) தேனீ
(இ) மீன் (ஈ) ஆடு

11. சூரியகாந்தி பயிருக்கான பயிர் விலகு தூரம் __________.

(அ) 50 மீ (ஆ) 10 மீ
(இ) 25 மீ (ஈ) 200 மீ

12. பழங்களை பழுக்க வைக்க உதவும் ஊக்கி __________.

(அ) IAA (ஆ) NAA
(இ) ABA (ஈ) எத்திலின்

13. காளானில் உள்ள கொழுப்புச் சத்தின் அளவு __________.

(அ) 5.0 (ஆ) 8.0
(இ) 2.0 (ஈ) < 2

14. வருடத்தில் இரண்டு தடவை வளர்க்கப்படும் பட்டுப்புழு இனத்திற்கு __________ என்று பெயர்.

(அ) யுனி வால்டைன் (ஆ) பை வால்டைன்
(இ) டிரை வால்டைன் (ஈ) மல்டி வால்டைன்

15. ஆடுகளின் நரம்பு மண்டலத்தை தாக்கும் நோய் எது ?

(அ) அம்மை நோய் (ஆ) பால் காய்ச்சல்
(இ) துள்ளுமாரி (ஈ) கோமாரி

(B) பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **ஓரிரு** வார்த்தைகளில் விடையளிக்வும். **15x1=15**

16. தென்னையில் குரும்பை உதிர்தலை தடுப்பதற்கான வளர்ச்சி ஊக்கி யாது ?

17. பருத்தி பயிரின் இரகங்களில் நுனி கிள்ளுதல் எந்தக் கணுவில் மேற்கொள்ளப் படுகிறது ?

18. கரும்பு பயிரைத் தாக்கும் நோய் ஒன்றினை எழுது.

19. மரவள்ளி கிழங்கிலிருந்து பெறப்படும் பொருள் ஒன்றினை கூறுக.

20. பப்பாளியில் உள்ள நொதிப் பொருள் என்ன ?

21. மஞ்சள் கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்த பயன்படும் இரசாயனம் யாது ?

22. கற்றாழையிலிருந்து எடுக்கப்படும் எப்பொருள் உடலின் சருமத்திற்கு பாதுகாப்பானதாக கருதப்படுகிறது ?

23. பருத்தி காய் புழுக்களின் முட்டை ஒட்டுண்ணி யாது ?

24. ஒருங்கிணைந்த பண்ணையத்தில் வளர்க்கப்படும் மாட்டினங்கள் ஒன்றினை எழுது.

25. பயிர் பெருக்க முறைகள் யாவை ?

26. விதை உற்பத்தியில் இனக்கலப்பை தவிர்ப்பதற்காக பராமரிக்கப்படும் இடைவெளி எவ்வாறு அழைக்கப்படும் ?

**27.** இந்தியாவில் ''இரண்டாம் பசுமைப் புரட்சி'' என்று எதனை குறிப்பிடுகிறோம் ?

**28.** அழகு மற்றும் பயனுள்ள மரவகைகளை ஒரே இடத்தில் வகை வாரியாக நட்டு பராமரிக்கும் முறையின் பெயர் என்ன ?

**29.** அக்மார்க் என்றால் என்ன ?

**30.** ஆடுகளில் கருச்சிதைவு ஏற்படுத்தும் நோய் எது ?

## பகுதி - II

**II.** **ஏதேனும் பத்து** வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் **நான்கு** வரிகளில் விடையளிக்கவும். **10x4=40**

**31.** மக்காச்சோளப் பயிரின் முக்கியமான வளர்ச்சி பருவங்கள் யாவை ?

**32.** உளுந்துப் பயிரின் சாகுபடியில் இரு அறுவடை நுட்பம் என்றால் என்ன ?

**33.** பி.டி. பருத்தி என்றால் என்ன ?

**34.** பப்பாளியில் பால் எடுக்கும் முறையினை எழுதுக.

**35.** கற்றாழையின் பொருளாதார முக்கியத்துவத்தினை எழுதுக.

**36.** நச்சு கவர்ச்சி உணவு என்றால் என்ன ? அதனை எவ்வாறு தயாரிக்கலாம் ?

**37.** ஒருங்கிணைந்த பண்ணையத்தில் தேனீ வளர்ப்பின் பங்கு யாது ?

**38.** ஆதார விதைக்கும், சான்றிதழ் விதைக்கும் உள்ள வேறுபாட்டினை எழுதுக.

39. சொட்டு நீர் பாசனத்தின் நன்மைகள் யாவை ?

40. பசுமைக்கூடம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

41. கலப்பட தடைச்சட்டம் பற்றி எழுதுக.

42. கால்நடை நோய்களுக்கு வருமுன் காப்பு முறைகளை எழுதுக.

## பகுதி - III

III. **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு மட்டும், ஒவ்வொன்றிற்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்கவும். **5x10=50**

43. நெல் சாகுபடியில் நாற்றங்கால் நிர்வாகம் பற்றி எழுதுக.

44. கொண்டைக்கடலை பயிர் சாகுபடி பற்றி விவரிக்கவும்.

45. வெண்டைப்பயிர் சாகுபடி முறைகளை விவரி.

46. மஞ்சள் சாகுபடி முறையினை எழுதுக.

47. முல்லை சாகுபடி பற்றிக் குறிப்பு தருக.

48. நன்செய் நிலத்தில் ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம் பற்றி எழுதுக.

49. மாடுகளை தாக்கும் ஏதேனும் ஐந்து நோய்களின் அறிகுறிகள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகளை விவரிக்கவும்.

## பகுதி - IV

**IV.** எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் **இரண்டு பக்க** அளவில் விடையளிக்கவும். **4x20=80**

**50.** சூரியகாந்தி பயிரின் சாகுபடி முறைகளை எழுதுக.

**51.** கரும்பு பயிருக்கான சாகுபடி முறைகளை பற்றி விவரி.

**52.** புகையிலை பதப்படுத்துதல் பற்றி கட்டுரை வரைக.

**53.** நெற்பயிருக்கான ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பினை விவரிக்கவும்.

**54.** பருத்தி வீரிய ஒட்டு இரக உற்பத்தியினை விவரிக்கவும்.

**55.** குறிப்பெழுதுக. (அ) ராணித் தேனீ

(ஆ) ஆண் தேனீ

(இ) வேலையாள் தேனீ

**- o O o -**